நகராட்சி அலுவலகம், மானாமதுரை
நாள். 01.02.2024

## நகர்மன்ற சாதாரண கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவராண்டு **2055,** ஸ்ரீ சோபகிருது வருடம் தை மாதம் **25** ஆம் தேதி பிப்ரவரி மாதம் **8** ம் நாள் **(08.02.2024)** வியாழக்கிழமை காலை **11.00** மணியளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்ற தலைவர்,**
**மானாமதுரை.**

## பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | மானாமதுரை நகரின் நடுவில் வைகை ஆறு செல்கிறது. இந்நகராட்சி சுமார் 40 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட நகரமாகும். இப்பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் (ஏப்ரல்) ஸ்ரீ ஆனந்தவள்ளி அம்மன் கோவில் சோமநாதர் கோவில் மற்றும் ஸ்ரீ வீர அழகர் வைகை ஆற்றில் இறங்கும் சித்திரை திருவிழா சிறப்பு பெற்ற திருவிழாவாகும். இத்திருவிழாவின் போது வைகை ஆற்றில் நகர் பொதுமக்கள் மற்றும் சுற்றி உள்ள கிராமத்தை சேர்ந்தவர்களும், ஒரு வார காலம் தினந்தோறும் இலட்சக்கணக்கில் கூடுவார்கள். இந்நகராட்சி சார்பாக மின்விளக்கு, தண்ணீர் வசதிகள் செய்து தரப்படும். அப்போது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்கள் நேரடி ஆய்வு மேற்கொண்ட போது கீழ் மின்விளக்கு குறைவாக உள்ளதாக கூறினார். அதனை தொடர்ந்து கூடுதலாக மின்விளக்கு அமைத்தற்காக தமிழ்நாடு விதி 2023பிரிவு 57ன் உள்ளூர் விலைப்புள்ளிகள் ரூ. 3.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி செய்து முடிக்கப்பட்டது இந்நகராட்சியின் பொதுநிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக்குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண். 1690/23/அ1)** |
| **2.** | நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையின் படி, Hamedheen Entriprises Private Limited – Madurai அவர்களின் கடிதத்தின்படி இந்நகராட்சியில் நடத்தப்பட்ட 5 முகாமிற்கு தேவையான கணினி எண்ணம் –38, கணினி பிரிண்டர் 35 எண்ணம் 5 முகாமிற்கு மொத்த பிரிண்டர் டோனர் எண்ணிக்கை வீதம் 1க்கு மொத்தம் 2500/– மற்றும் 5 முகாமிற்கு தேவையான 2 வண்டி வாடகை, டீசல், டிரைவர் படி, கம்யூட்டர் இன்ஜினியரிங் சம்பளம் உட்பட மொத்த தொகை ரூ. 9800/– ஆக மொத்தம் 5 முகாமில் கணினி வசதிகள் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ. 2,07,222/– யினை Hamedheen Entriprises Private Limited – Madurai அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவின தொகையான நகராட்சி பொது நிதியில் செலவின மேற்கொள்ளலாம் மன்ற அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1672/2023/சி1)** |

**3.** மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான மீன் சந்தை குத்தகை உரிமத்திற்கான ஏலம்/ 07.12.2023 அன்று கோரப்பட்டது. பின்வரும் விரப்படி ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியுள்ளனர்.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு. ம. பாலு,<br>138 பழைய தபால் ஆபீஸ் தெரு<br>மானாமதுரை | 65500/– |
| 2. | திரு. கோ. வேல்முருகன்<br>5/ஏ அழகர் கோவில் தெரு<br>மானாமதுரை | 65100/– |

வரிசை என் 1ல் காணும் திரு. க. பாலு என்பவர் ரூ.65500/– அதிகபட்ச ஏலம் கோரியுள்ளார். மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

<u>**அலுவலக்குறிப்பு:–**</u>

மேற்படி குத்தகை உரிமத்திற்கான ஏலம்/ஒப்பந்தப்புள்ளியானது பலமுறை கோரப்பட்டது. தற்போது கோரப்பட்டுள்ள ஏலக்கேள்வி ரூ.65500/– உள்ளது.

அரசாங்க மதிப்பை காட்டிலும் ரூ.500/– அதிகமாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.2038/– அதிகமாகவும் உள்ளது.

அலுவலக வாயிலாக வசூல் செய்வதற்கு, பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் நிர்வாக நலன் கருதி, திரு. ம. பாலு என்பவரது ஏலத்தொகை ரூ. 65500/– ஐ அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 432/2022/அ1)**

**4.** அரசாணை (நிலை) எண் 130, பள்ளிக்கல்வித்துறை (பொ.நு.2) நாள் 25.07.2023 ன்படி, புத்தக வாசிப்பினை பொது மக்கள் இயக்கமாக எடுத்துச்செல்ல மாவட்டந்தோறும் புத்தக கண்காட்சி நடத்திட உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே சிவகங்கை மாவட்டத்தில் 27.01.2024 முதல் 06.02.2024 வரை புத்தக கண்காட்சி நடைபெற்றுள்ளது.

மேற்காணும் அரசாணையின் படி, நகர்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு புத்தக வாசிப்பினை மேம்படுத்தும் விதமாக, நகராட்சி சார்பில் புத்தகங்கள் வாங்கிடவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக்குறிப்பு:–**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 113/2024/D1)**

**5.** மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வசூல் செய்யும் குத்தகை உரிமத்திற்கான ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 11.01.2024அன்று கோரப்பட்டது. கீழ்கண்ட விபரப்படி, ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூ |
|---|---|---|
| 1. | திரு. போ. பிரபு<br>47A, ஆவரங்காடு,<br>வெள்ளிக்குறிச்சி (போஸ்ட்)<br>மானாமதுரை | ரூ. 3,76,000/– |

வரிசை எண் 1ல் காணும் திரு. போ. பிரபு என்பவர் ரூ. 3,76,000/– அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

<u>**அலுவலககுறிப்பு:**</u>

மேற்படி, குத்தகை உரிமத்திற்கான ஏலம்/ஒப்பந்தப்புள்ளியானது 5 முறை கோரப்பட்டது. தற்போது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 3,76,000/– ஆக உள்ளது.

அலுவலக வாயிலாக வசூல் செய்வதற்கு பணியாளர்கள் பற்றக்குறை மற்றும் செலவினங்களை கருத்தில் கொண்டும், நிர்வாக நலன் கருதி திரு. போ.பிரபு என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3,76,000/– ஐ அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 432/2022/அ1)**

| | |
|---|---|
| 6. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12ல் பட்டரை தெருவில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ள காரணத்தினால் மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்கி பொதுமக்கள் மிகவும் சிரமப்படும் நிலையில் உள்ளதால், மேற்கண்ட இடத்தில் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகையாக ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 139/2023/இ1)** |
| 7. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14ல் பாபா பள்ளி நுழைவாயில், அப்பன் பெருமாள் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ள காரணத்தினால் பள்ளி வாகனங்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள சேதமடைந்த மழைநீர் வடிகாலினை சீர் செய்வதற்கு மற்றும் அபிவிருத்திப்பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 000138/2023/இ1)** |
| 8. | இந்நகராட்சி அலுவலகத்தில் போதுமான தண்ணீர் பற்றாக்குறை உள்ள காரணத்தினால் இவ்வலுவலக பணியாளர்களின் சிரமத்தினை கருத்தில் கொண்டு இவ்வலுவலக வளாகத்தில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு மதிப்பீட்டு தொகையாக ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 140/2023/இ1)** |
| 9. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4–ல் அன்பு நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் அங்கு அமைந்துள்ள அரசு மகளிர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தண்ணீர் தேங்கி பள்ளி மாணவர்களுக்கு மிகவும் சிரமான நிலையில் உள்ளது மேற்கண்ட அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி முதல் அனபு நகர் முதல் தெரு வரை புதியதாக மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீட்டு தொகையாக ரூ.14.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 141/2023/இ1)** |
| 10. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9ல் சி.எஸ்.ஐ சர்ச் அருகில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ள காரணத்தினால் தண்ணீர் தேங்கி பொதுமக்கள் மிகவும் சிரமப்படும் நிலையில் உள்ளதால், மேற்கண்ட இடத்தில் உள்ள மழைநீர் வடிகாலினை பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணி செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 142/2023/இ1)** |

| | |
|---|---|
| 11. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6ல் உச்சி மாகாளியம்மன் கோவில் இருக்கும் சாலையில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து உள்ளதால். அப்பகுதியின் வழியாக செல்லும் கனரக வாகனங்களால் விபத்து ஏற்படும் சூழ்நிலையில் உள்ளது. மேலும் அச்சாலையின் வழியே பிரசித்தி பெற்ற ஆனந்தவல்லி அம்மன் சோமநாதர் கோவில் தேரோட்டம் வருடந்தோறும் நடைபெறும் என்பதாலும் சேதமடைந்துள்ள அம்மழைநீர் வடிகாலினை அகற்றி புதியதாக புதிய மழைநீர் வடிகால் அமைப்பது அவசியம் என பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி மேற்கண்ட சேதமடைந்துள்ள மழைநீர் வடிகால் பகுதியினை நேரடியாக கள ஆய்வு செய்யப்பட்டு புதிய மழைநீர் வடிகால் 100 மீட்டர் நீளத்திற்கு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.14.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 143/2023/இ1)** |
| 12. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள பொதுமக்களுக்கு தலைமை நீர்உந்து நிலையத்திலிருந்து அண்ணாசிலை குடிநீர் தொட்டி, காந்தி சிலை குடிநீர் தொட்டி, கண்ணார் தெரு குடிநீர் தொட்டி மற்றும் ரயில்வே காலனி குடிநீர் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது மேற்கண்ட 4 குடிநீர் தொட்டிகளில் ரயில்வே காலனி குடிநீர் தொட்டி மற்றும் கண்ணார் தெரு குடிநீர் தொட்டிகளுக்கு GAS CHLORINE மூலம் குளோரின் கலந்து சுகாதாரமான முறையில் 15HP மின் மோட்டார் மூலம் சீரான குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது<br>மேற்கண்ட ரூ.2.50 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட அண்ணாசிலை குடிநீர் தொட்டி மற்றும் ரூ.4.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட காந்தி சிலை குடிநீர் தொட்டிக்கு GAS CHLORINE மூலம் குளோரின் கலக்க இயலாத சூழ்நிலை உள்ளதால் மேற்கண்ட இரண்டு குடிநீர் தொட்டிகளில் இருந்து சுகாதாரமான முறையில் குடிநீர் விநியோகம் வழங்குவதில் நடைமுறை சிக்கல் ஏற்பட்டுள்ளது இதனால் டெங்கு மலேரியா தொற்றுநோய் ஏற்படுகிறது. எனவே இதனை சரிசெய்யும் பொருட்டு இரண்டு எண்ணம் 5HP Malty level stage pump மூலம் 1 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட SUMP-ல் இருந்து 30 HP மின் மோட்டர் மூலம் அண்ணாசிலை குடிநீர் தொட்டி மற்றும் காந்தி சிலை குடிநீர் தொட்டிக்கு செல்லக்கூடிய 150 MM பிரதான மெயின் குழாய்க்கு 180 மீட்டர் நீளம் பைப் பதித்து, இணைப்பு கொடுத்து அனைத்து பகுதி பொதுமக்களுக்கும் சுகாதரமான முறையிலும் சீரான முறையிலும் குடிநீர் விநியோகம் வழங்குவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.5.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 145/2023/இ1)** |
| 13. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.6 மற்றும்14 முதல் 23 வரை மற்றும் 26 முதல் 27 வரை வரை உள்ள ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் மோட்டார், பேனல் போர்டு பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட வேண்டியுள்ளது, எனவே ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திடவும், பொதுமக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு குடிநீர் நிதியின் மூலம் ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 146/2023/இ1)** |

| | |
|---|---|
| 14. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.1 முதல் 5 வரை, வார்டு எண்.7 முதல் 13 வரை மற்றும் வார்டு எண்.24 முதல் 25 வரை உள்ள ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் மோட்டார், பேனல் போர்டு பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட வேண்டியுள்ளது, எனவே ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திடவும், பொதுமக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு குடிநீர் நிதியின் மூலம் ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 147/2023/இ1)** |
| 15. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டஎண்.10, 12 மற்றும் 13ல் உள்ள பொதுமக்களுக்கு காந்தி சிலை மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட குடிநீர் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வரும் நிலையில் அதிக உயர் மின் அழுத்த காரணமாக மின் மோட்டார் மூலம் வழங்கப்படும் குடிநீரில் அழுத்தம் ஏற்பட்டு குடிநீர் விநியோக குழாய் மழை நீர் வடிகாலில் உடைப்பு ஏற்பட்டது. அதனால் மேற்கண்ட வார்டு பொதுமக்களுக்கு சாக்கடைநீர் கலந்து சென்றுள்ளதால் பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர் மற்றும், நகர்மன்றத்தலைவர் ஆகியோர் அளித்த புகாரின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கள ஆய்வு மேற்கொண்டபொழுது குடிநீரின் கழிவு நீர் கலந்த பகுதிகளில் உடனடியாக பிரதான குழாயினில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரிசெய்து சுகாதாரமான முறையிலும் சீரான முறையிலும் குடிநீர் விநியோகம் வழங்க தெரிவித்தார்கள் எனவே மேற்கண்ட வார்டு எண்.10ல் சுமார் 80 குடும்பங்களும், வார்டு எண்.12ல் சுமார் 450 குடும்பங்களும், வார்டு எண்.13ல் சுமார் 300 குடும்பங்களும் வசிக்கும் பகுதிகளில் பொதுமக்களுக்கு சுகாதாரமான முறையிலும் சீரான முறையிலும் குடிநீர் விநியோகம் வழங்க அவசர அவசியம் கருதி பணியினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதி 2023 பிரிவு 57Aன்படி நகராட்சி ஒப்பந்ததாரர்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டதனையும் அதற்கான செலவினத் தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 148/2023/இ1)** |
| 16. | மானாமதுரை நகராட்சி வார்டு எண் 1முதல் 27 வரை உள்ள பொதுமக்களுக்கு தலைமை குடிநீர் ஊற்றிலிருந்து அண்ணாசிலை குடிநீர் தொட்டி, காந்தி சிலை குடிநீர் தொட்டி, கண்ணார் தெரு குடிநீர் தொட்டி மற்றும் ரயில்வே காலனி குடிநீர் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது மேற்கண்ட 4 குடிநீர் தொட்டிகளில் உள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய புதிதாக30HP மின் மோட்டார், 15HP மின் மோட்டார்,7.5HP மின் மோட்டார், 5HP மின் மோட்டார், பேனல் போர்டு, 3" முதல் 10" sluice valve மற்றும் ரோப் கயிறு ஆகிய குடிநீர் மற்றும் மின் உதிரி பாகங்கள் தடையின்றி குடிநீர் வழங்க தேவைப்படுகிறது, எனவே மேற்கண்ட குடிநீர் உதிரி பொருட்கள் கொள்முதல் செய்து சீரான முறையில் குடிநீர் விநியோகம் வழங்குவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 149/2023/இ1)** |

**17.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23ல் மறவர் தெருவில் உள்ள ஆற்றங்கரையோரம் இறந்தவர்களின் ஈமச்சடங்கு செய்வதற்கு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள்களின் நலன் கருதி ஆழ்துளை கிணறு மற்றும் குளியல் தொட்டி அமைப்பதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகையாக ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 150/2023/இ1)**

**18.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25ல் கன்னார் தெருவில் உள்ள பழைய ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் பற்றாக்குறை மோட்டார் பழுது மற்றும் கட்டுமானம் சேதமடைந்துள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் சுமார் 200 குடும்பத்தினர் தண்ணீர் பற்றாக்குறையினால் மிகவும் சிரமத்திற்கு உள்ளனர், எனவே பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி அப்பகுதியில் புதியதாக சிறிய மின்விசை பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைக்க நேராடியாக ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகையாக ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 151/2023/இ1)**

**19.** மானாமதுரை நகராட்சிக்கு 2023–2024ஆம் நிதியாண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் பின்வரும் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 19.01.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மானாமதுரை நகராட்சி வார்டு எண்.1 காட்டு உடைகுளம் கணபதி நகர் புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 1.00 | திரு.சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | 0.03% குறைவு |
| | | | திரு.C.நாகசேகர் ஒப்பந்ததாரர் | 0.05% அதிகம் |
| 2 | மானாமதுரை நகராட்சி வார்டு எண்.16 வெள்ளாளர் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 4.00 | திரு.சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | 0.02% குறைவு |
| | | | திரு.C.நாகசேகர் ஒப்பந்ததாரர் | 0.35% அதிகம் |
| 3 | மானாமதுரை நகராட்சி வார்டு எண்.25, முகமதியார் கீழ்மேல் சந்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 3.00 | M/s.சூர்யா கன்ரெக்சன் ஒப்பந்ததாரர் | 0.11% குறைவு |
| | | | திரு.சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | 0.16% அதிகம் |
| 4 | மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 3.00 | ASK.பாபு ஒப்பந்ததாரர் | 0.03% குறைவு |
| | | | சர்குரு மோட்டார்ஸ் ஒப்பந்ததாரர் | 0.05% அதிகம் |

**அலுவலக்குறிப்பு:-**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை எற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1518/2023/இ1)**

**20.** மானாமதுரை நகராட்சிக்கு 2023–2024ஆம் நிதியாண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் பின்வரும் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 15.12.2023ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மானாமதுரை நகராட்சி பகுதியில் நடைபெறும் அரசு விழா நிகழ்ச்சிகளுக்கு சாமியான பந்தல், மைக் செட், டேபிள் சேர், குடிநீர் பணியினை மேற்கொள்ளுதல். | 5.00 | திரு.பாலாஜி ஒப்பந்த்தாரர் | 0.03% குறைவு |
| | | | திரு.சந்திசேகரன் ஒப்பந்த்தாரர் | 0.05% அதிகம் |

**அலுவலக்குறிப்பு:-**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்த்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை எற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1541/2023/இ1)**

**21.** மானாமதுரை நகராட்சிக்கு 2023–2024ஆம் நிதியாண்டு குடிநீர்நிதி திட்டத்தின் கீழ் பின்வரும் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 15.12.2023ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான ராஜகம்பீரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் மராமத்து பணி மேற்கொள்ளுதல். | 5.00 | திரு.சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | 0.10% குறைவு |
| | | | திரு.C.நாகசேகர் ஒப்பந்ததாரர் | 0.15% அதிகம் |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்1முதல் 27 வார்டுகளில் குடிநீர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | 3.00 | திரு.பாலாஜி ஒப்பந்ததாரர் | 0.03% குறைவு |
| | | | திரு.சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | 0.05% அதிகம் |

**அலுவலக்குறிப்பு:-**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை எற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1516/2023/இ1)**

| | |
|---|---|
| **22.** | மானாமதுரை நகராட்சிக்கு 2023–2024ஆம் நிதியாண்டு குடிநீர்நிதி திட்டத்தின் கீழ் பின்வரும் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 12.01.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 முத்து நகர் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி. | 3.30 | திரு.T.காவேரி ஒப்பந்ததாரர் | 0.13% குறைவு |
| | | | திரு.S.பாண்டி ஒப்பந்ததாரர் | 0.41% அதிகம் |
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண்.19ல் சவேரியார்புரம் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி. | 3.30 | திரு.T.காவேரி ஒப்பந்ததாரர் | 0.13% குறைவு |
| | | | திரு.S.பாண்டி ஒப்பந்ததாரர் | 0.41% அதிகம் |
| 3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24ல் மணி பட்டறை சந்தில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி. | 3.30 | திரு. V.பாஸ்கரன் ஒப்பந்ததாரர் | 0.18% குறைவு |
| | | | திரு.மூர்த்தி ஒப்பந்ததாரர் | 0.56% அதிகம் |
| 4 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25ல் மாரியம்மன்கோவில் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி. | 3.30 | M/s.சூர்யா கன்ஸ்டிரக்சன் ஒப்பந்ததாரர் | 0.09% குறைவு |
| | | | திரு. சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | 0.33% அதிகம் |

**அலுவலக்குறிப்பு:–**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்த்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை எற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 522/2023/இ1)**

| | |
|---|---|
| **23.** | மானாமதுரை நகராட்சிக்கு 2023–2024ஆம் நிதியாண்டு குடிநீர்நிதி திட்டத்தின் கீழ் பின்வரும் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 10.01.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தத்தாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 2 ராம் நகர், நாகர்கோவில் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி | 3.30 | திரு.மூர்த்தி ஒப்பந்ததாரர் | 0.01% குறைவு |
| | | | திரு.பாலாஜி ஒப்பந்ததாரர் | 0.39% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 3ல் சாஸ்தா நகரில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி | 3.30 | திரு. .மூர்த்தி ஒப்பந்ததாரர் | 0.01% குறைவு |
| | | | திரு. பாலாஜி ஒப்பந்ததாரர் | 0.39% அதிகம் |
| 3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 7ல் செட்டிய தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி | 3.30 | திரு. பாலாஜி ஒப்பந்ததாரர் | 0.02% குறைவு |
| | | | திரு.சத்தியேந்திரன் ஒப்பந்ததாரர் | 0.35% அதிகம் |
| 4 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்8 மாரியம்மன் கோவில் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி | 3.30 | திரு. சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | 0.03% குறைவு |
| | | | திரு.S.மணிகண்டன் ஒப்பந்ததாரர் | 0.39% அதிகம் |
| 5 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12 குலாளர் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி | 3.30 | M/s.சூர்யா கன்ஸ்டிரக்சன் ஒப்பந்ததாரர் | 0.11% குறைவு |
| | | | திரு. சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | 0.16% அதிகம் |
| 6 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 13 தெற்கு ரதவீதி நகரில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி | 3.30 | M/s.சூர்யா கன்ஸ்டிரக்சன் ஒப்பந்ததாரர் | 0.11% குறைவு |
| | | | திரு. சந்திரசேகரன் ஒப்பந்ததாரர் | 0.16% அதிகம் |

**அலுவலக்குறிப்பு:-**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்த்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை எற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 522/2023/இ1)**

**24.** மானாமதுரை நகராட்சிக்கு 2022-2023ஆம் நிதியாண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் பின்வரும் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 24.03.2023ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 23 பழைய பேருந்து வளாகத்தில் உள்ள பொதுகழிப்பறை பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 5.00 | திரு.மூர்த்தி ஒப்பந்ததாரர் | 0.02% குறைவு |
| | | | திரு.V.பாஸ்கரன் ஒப்பந்ததாரர் | 0.04% அதிகம் |

**அலுவலக்குறிப்பு:-**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை எற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 125/2023/இ1)**

| | |
|---|---|
| **25.** | மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3ல் சாஸ்தா நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ள காரணத்தினால் தண்ணீர் தேங்கி பொதுமக்கள் மிகவும் சிரமப்படும் நிலையில் உள்ளதால், எனவே பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி அப்பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 158/2023/இ1)** |
| **26.** | மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் அரசு மருத்துவமனை நுழைவாயில் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் கொசுக்கள் உற்பத்தியாகும் காரணங்களால், பொதுமக்கள் மருத்துவமனைக்கு வந்து செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக மாவட்ட ஆட்சியர் மற்றும் நகர்மன்றத் தலைவர் கள ஆய்வு செய்து மேற்கண்ட இடத்தில் புதியதாக பேவர்பிளாக் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்ததன் அடிப்படையில், தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 161/2023/இ1)** |
| **27.** | மானாமதுரை நகரின் நடுவில் வைகை ஆறு செல்கிறது இந்நகராட்சியில் சுமார் 40 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட நகரமாகும். இப்பகுதியில் வரும் 2024ம் ஆண்டு சித்திரை மாதம் (ஏப்ரல்) நடைபெற உள்ள ஸ்ரீ ஆனந்தவள்ளி அம்மன் கோவில் சோமநாதர் கோவில் மற்றும் ஸ்ரீ வீரஅழகர் வைகை ஆற்றில் இறங்கும் சித்திரை திருவிழா சிறப்பு பெற்ற திருவிழாவாகும். இத்திருவிழாவின் போது வைகை ஆற்றில் நகர் பொதுமக்கள் மற்றும் சுற்றி உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்களும் ஒரு வார காலம் தினந்தோறும் இலட்சக்கணக்கில் கூடுவார்கள். இந்நகராட்சி சார்பாக மின் விளக்கு, தண்ணீர் வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 160/2024/இ1)** |
| **28.** | மானாமதுரை நகரின் நடுவில் வைகை ஆறு செல்கிறது இந்நகராட்சியில் சுமார் 40 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட நகரமாகும். இப்பகுதியில் வரும் 2023ம் ஆண்டு சித்திரை மாதம் (ஏப்ரல்) நடைபெற உள்ள ஸ்ரீ ஆனந்தவள்ளி அம்மன் கோவில் சோமநாதர் கோவில் மற்றும் ஸ்ரீ வீரஅழகர் வைகை ஆற்றில் இறங்கும் சித்திரை திருவிழா சிறப்பு பெற்ற திருவிழாவாகும். இத்திருவிழாவின் போது வைகை ஆற்றில் நகர் பொதுமக்கள் மற்றும் சுற்றி உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்களும் ஒரு வார காலம் தினந்தோறும் இலட்சக்கணக்கில் கூடுவார்கள். எனவே வைகை ஆற்றில் உள்ள தண்ணீர் செல்வதற்கு இந்நகராட்சி சார்பாக சிமிண்ட் பைப் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 159/2023/இ1)** |

| | |
|---|---|
| 29. | இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை தடுப்புபணி நடைபெற்று வருகிறது. இப்பணி சுயஉதவிக்குழு பணியாளர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. இப்பணியைஒப்பந்தபுள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் சுய உதவிக்குழு மூலம் பணிநடைபெறுவதற்கு ஊதியம் மாதம் 1க்கு ரூ.2,00,000 வீதம் என நான்கு மாதங்களுக்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.8,00,000/க்கு (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>3. டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி நடைபெறுவதை மன்றம் ஏற்காலம். |
| 30. | மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21ல் பழைய பேருந்து நிலையத்தில் பொது சமுதாயக்கூடம் மற்றும் வணிக வளாகம் இயங்கி வருகிறது. இவ்வளாகத்தில் சுற்றுச்சுவர் இல்லை, இதனால் சமூகவிரோதிகள் மற்றும் வெளி நபர்களினால் வளாகத்தில் உள்ள பொருட்கள் மற்றும் கட்டிடங்கள் சேதமடைந்து உள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் குத்தகைதாரர்களின் கோரிக்கையின்படி வளாகத்தினை சுற்றி 65 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச்சுவர் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |
| 31. | மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான அண்ணாசிலை மேல்நிலை குடிநீர் தேக்க தொட்டி அருகில் உள்ள நகராட்சி பணியாளர் குடியிருப்பு பயன்படுத்த முடியாத நிலை பழுதடைந்துள்ளது. மேற்கண்ட பணியாளர் குடியிருப்பு மேற்கூரை, தரைதளம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 164/2023/இ1)** |
| 32. | மானாமதுரை நகராட்சி சிறப்புநிதி 2021–22ன் கீழ் கூடுதல் அலுவலகம் கட்டிடம் கட்டுமான பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட கட்டிடத்திற்கு Front Elevation முன் நுழைவு மேம்படுத்தல் பணி மேற்கொள்ளவும் மற்றும் தற்போது உள்ள பழைய அலுவலக கட்டிடத்தை மேம்படுத்தி வர்ணம் பூசுதல் மற்றும் கூடுதல் பணிகள் செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.19.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண். 165/2023/இ1)** |

| 33. | மானாமதுரை நகராட்சிக்கு 2023–2024ஆம் நிதியாண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் பின்வரும் மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள 05.01.2024ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. |
|---|---|

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மானாமதுரை நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் ஈப்பு வாகனத்தினை இயக்குவதற்கு, மற்றும் கணினி இயக்குபவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளுதல் பணி. | 5.00 | M/s.எக்சர்நெட் ஒப்பந்ததாரர் | 0.02% குறைவு |
| | | | AVM.Service Point, ஒப்பந்ததாரர் | 0.04% அதிகம் |

**<u>அலுவலக்குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 525/2024/இ1)**

**நகர்மன்ற தலைவர்,**
**மானாமதுரை**